[21st November 1963

பிள்ளை பிடிப்போர் கோஷ்டி

*371 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, வேலூர் முதலான இடங்களில் சிறு குழந்தைகளையும் சிறுவர்களையும் பிடிப்போர் (கோஷ்டியினர்) உலவி வருவதாகத் தகவல் ஏதேனும் சர்க்காருக்குக் கிடைத்ததா?

(இ) இந்தக் கோஷ்டியை பிடிக்க சர்க்கார் எடுத்துள்ள ஏற்பாடுகள் என்ன?

(உ) இதன் பயனாக (1) கைது செய்யப்பட்டவர்கள் (2) மீட்கப்பட்ட சிறுவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) & (c) Two persons were arrested during February 1963 at Vellore, North Arcot, in connection with kidnapping of children. The cases against them are pending trial in the Court. The children were rescued. No case of kidnapping of children was reported from the City.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த மாதிரி பிள்ளை பிடிப்பவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களா அல்லது பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்களின் பெயரைப் பார்த்தால் தமிழ் நாட்டுப் பெயராக இல்லை.

தனிநபர் வருமானம் (உச்சவரம்பு)

*372 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டதுபோல் தனி நபர்கள் வருமானத்திற்கும் உச்சவரம்பு நிர்ணயிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

திரு. இரா. நாராயணன்: இந்த ஜனநாயக ஆட்சியிலே தனி நபர்களின் வருமானத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்காமல் இருப்பது சரியல்ல என்பதை அரசாங்கம் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனி நபர்கள் உழைத்து அவர்கள் ஆற்றலின் மூலமாக வருமானத்தைப் பெருக்கிக் கொண்டால், அதற்கு தடை விதிப்பது சரியல்ல. ஆகவேதான் அத்தகைய யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தேன்.

21st November 1963]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்திருக்கிறோம். நிலத்திற்கு உச்ச வரம்பு வரப்போகிறது என்று தெரிந்ததும், முன்னதாகவே பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் தங்கள் நிலத்தைப் பணமாக மாற்றி, பெரிய தொழில்களிலே மூலதனம் போட்டிருக்கிறார்கள். சோஷலிஸத்தைக் கடைப்பிடிக்கும் இந்த சர்க்கார் எல்லாத் துறைகளிலும் இருக்கிற தனிப்பட்டவர்களின் வருமானத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிகமாக நிலத்தை வைத்துக் கொண்டிருந்தவர்கள் நிலத்தை விற்றதினாலே நிலம் எங்கேயும் போய் விடவில்லை. வேறு கைக்கு மாறி இருக்கிறது. அதனால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். அதனால் கிடைத்த பணத்தைத் தொழில் வளர்ச்சிக்காகப் போடுவதையும் அரசாங்கம் வரவேற்கின்றது. அப்படி மூலதனம் போட்டு, தொழில் அதிபர்களாகிச் சம்பாதித்தால் அதிலிருந்து எப்படி நாம் பெரும் பகுதியைப் பெற முடியும் என்பதும் தெரியும். அந்த வகையிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

Higher Studies in Engineering

* 373 *Q.*—Sri K. B. PALANI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to offer extra payment to Post-Graduate students in Highways Engineering Service; and

(*b*) If so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The proposal is still under consideration and the details have not yet been finalised.

Highways Research Department

* 374 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) what is the nature of the work done by the Officer in charge of the administration of the Highways Research Station; and

(b) what are the qualifications required for that post?

The Hon. Sri V. RAMAIAH : (a) The Director of the Highways Research Station is in charge of applied Research on Highway Engineering and Traffic Engineering. His chief function is providing expert knowledge to the field Engineers of the department in charge of various structural construction works and road works.

(*b*) The post is in the grade of Superintending Engineer and no special qualifications are prescribed for the post.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த ஆராய்ச்சி நிலையம் குறிப்பாக நிபுணத்துவத்தை அதிகரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்